கின்ற போது அவர் சிறு விவசாயி அல்ல, சிறு விவசாயிகளுக்குள்ள தகுதி பெற்றவர் அல்ல என்று கண்டுபிடித்த பின்னால், அவருக்கு அந்தச் சலுகைகள் வழங்கப்படாமல் இருந்திருக்கும். சான்றிதழ் பிரகாரம் தகுதி பெற்றிருந்தால் அவருக்கு அந்தச் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கும்.

திரு. கோ. வீரய்யன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது வரையில் 98 ஆயிரத்திற்கு அதிகமான சிறு விவசாயிகளுக்கு இலவசமாக மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். பட்டா இருக்கக் கூடிய சிறு விவசாயிகளுக்குத் தான் அப்படி கொடுக்கப்படுகிறது. நிலப் பட்டா இல்லாத குத்தகை விவசாயிகளுக்கு, ஏழை விவசாயிகளுக்கு, சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு என்.ஓ.சி. கொடுக்காவிட்டாலும் குத்தகைப் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு இருந்தால், அதை அடிப்படையாகக் கொண்டு, இலவச மின்சாரம் வழங்கப்படுமா ? மேலும் ......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதல் துணைக் கேள்விக்கே இதற்கான பதில் சொல்லப்பட்டு விட்டது. கேட்ட கேள்வியை மீண்டும் கேட்க வேண்டாம்.

திருப்பதியில் தமிழக அரசு கல்யாண மண்டபம்.

*139—(*வினா எண். 8173)*—**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பதியில், தமிழ்நாடு அரசு சார்பில் கல்யாண மண்டபம், தங்கும் விடுதி கட்ட அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : பேரவைத் துணைத் தள நாயகர் அவர்களே, தமிழ்நாட்டிலிருந்து திருப்பதிக்கு ஏராளமான பயணிகள் செல்கிறார்கள். பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு அங்கே திருமண மண்டபங்கள், ஓய்வு அறைகள் அந்தந்த மாநிலத்தின் சார்பில் கட்டப்பட்டிருக்கின்றன

1986 நவம்பர் 21]

கர்நாடக அரசு கூட அங்கே கட்டியிருக்கிறது. தமிழ்நாட்டிற்கு வடவேங்கடம் எல்லை என்ற முறையில் ஒரு காலத்தில் திருப்பதி தமிழ்நாட்டோடு இருந்தது. இப்போது ஆந்திர மாநிலத்தில் இணைந்திருந்தாலும் தமிழ்நாட்டின் சார்பாக எழிலான ஒரு கட்டிடத்தை அங்கே கட்ட அரசு ஏன் முன் வரக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்குத் தேவை யில்லை என்பதனால் தான் கட்ட முன் வரவில்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமலை-திருப்பதி தேவஸ் தானத்தைச் சார்ந்தவர்கள் என்னுடைய தொகுதியில் உள்ள குற்றாலத்திலே 10 இலட்ச ரூபாய் செலவிலே யாத்ரீகர்கள் விடுதி ஒன்றைக் கட்டியிருக்கிறார்கள். அதுபோல திருப்பதி செல்கிற யாத்ரீகர்களின் வசதிக்காக, தமிழக அரசின் சார்பாக ஒரு யாத்ரீகர்கள் விடுதி கட்ட அரசு முன் வருமா? அல்லது இதை என் வேண்டுகோளாகவே எடுத்துக் கொண்டு செயல்பட அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பதி தேவஸ் தானம் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்களின் தொகுதியில் மாத்திரம் அல்ல, தமிழ் நாட்டில் வேறு எங்காவது கேட்டால் கூட திருப்பதி தேவஸ்தானம் கட்டிக் கொடுக்கத் தயாராக இருக்கிறது. அவர்களே நமது நாட்டில் கட்டிக் கொடுக்க தயாராக இருக்கிற போது, தேவையிருக்கிறது என்று உணர்ந்தால் அவர்கள் எங்கு வேண்டுமானாலும் கட்டிக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அங்கே எல்லாவிதமான வசதிகளையும் செய்து தருவதாக தேவஸ்தானமே கூறுகிறபோது, நாம் வேறு தனியாக கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.